**கடுவெல பிரதேச சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 02 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 யூலை 26 ஆந் திகதியும் விபரமான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதியும் அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

எனது அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படையான பகுதியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்திதுவத்தின் காரணமாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடுவெல மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபையின் 196100163869561 ஆம் இலக்க வங்கி கணக்கின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 847,368 மீதி கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. | அனைத்து கணக்கு மீதிகளையும் நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சபையின் 196100163869591 ஆம் இலக்க கணக்கு, மீதி நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அது ஐந்தொகையில் குறிப்பு இலக்கம் 08 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 2018 திசெம்பர் 05 ஆந் திகதி உள்ளூராட்சி திணைக்களத்தால் கடன் அடிப்படையில் வழங்கிய ரூபா 10,779,000 பெறுமதியான 06 உழவு இயந்திரங்களுக்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் | கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கிறேன். 2019 ஆம் ஆண்டில் JE 03 இன் மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | ஏழ்மையான பிள்ளைகளுக்கு சப்பாத்துக்களை வழங்குவதற்காக ரூபா 3,500,000 தொகை பிழையாக கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டடிருநதது. | கடன்கொடுத்தோர் கணக்கை சரிசெய்து காட்டுதல் வேண்டும். | அந்த மீதியை பதிவழிப்பதற்காக 2019-07-20 ஆந் திகதி கூடுகின்ற நிதி குழுவிற்கு சமர்ப்பிப்பேன். |
| (iv) | உடன்படிக்கை காலத்தை மிகைத்த நிறைவேற்றப்படாத 06 வேலைகளுக்காக ரூபா 8,241,437 தொகை கடன்கொடுத்தோருக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கை சரிசெய்தல் வேண்டும். | சபை தீர்மானத்தின் பிரகாரம் பதிவழிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பபேன். |
| (v) | சொத்துக்கள் மீளாய்வின் அல்லது மெய்மையாய்வின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளாத ரூபா 7,434607 பெறுமதியான 20 ஆண்டுகள் பழைமையான நிலையான சொத்துக்கள் மீதி கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | இந் நிலையான சொத்துக்களை இணங்காணப்படுதல் வேண்டும். | எதிர்காலத்தில் அவ்வாறு இடம்பெறாதிருக்கும் வகையில் பொருட்களை இனங்காணும் முறைமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (vi) | 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 108,740 தொகைக்கு ஏலத்தில் விற்கப்பட்ட நிலையான சொத்துக்களின் கிரயத்தை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளிலிருந்து அகற்றப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அவ்வாறு இடம்பெறாதிருக்கும் வகையில் பொருட்களை இனங்காணும் குறியீட்டு முறைமை ஆரம்பிக்கப்படடுள்ளதாக வும் அதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாகவும் தயவு செய்து தெரிவிக்கிறேன். |
| (vii) | குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள பிள்ளைகளுக்கு சப்பாத்துக்களை வழங்குவதற்காக பகிர்ந்தளிப்பதற்கு கொள்வனவு செய்யப்பட்ட | இருப்புக்களில் கழித்து கணக்குகளில் காட்டப்படுதல் வேண்டும். | அதற்காக 2018-12-31 ஆந் திகதி பொருள் பெறுகைகள் இலக்கம் 2625 இன் மூலம் பொருள் பெறுகைப் பத்திரம் வழங்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 1,000 வீதம் 2,800 வவுச்சர்கள் கழிவுகள் கழிக்கப்பட்டதன் பின்னரான பெறுமதியாகிய ரூபா 2,380,000 தொகை சபையின் இருப்புக்களில் கழிக்கப்படாமையின் காரணமாக கணக்குகளில் இருப்பு பெறுமதி அப்பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | ளது. வழங்கல் கட்டளை இலக்கம் 05 இன் மூலம் 2019-01-10 ஆந் திகதி பயன்பாடுகள் மற்றும் நலன்புரித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. |
| (viii) | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்காக 2018 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா 220,439,262 தொகை கடன்பட்டோர் மீதிகளிலிருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். | வருமானம் பெறுவனவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது டன் அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | **விபரம்** | **வித்தியாசம் ரூபா** | | |
| (i) | தளபாடங்களும் பொருந்திகளும் | 48,360 | வித்தியாசயத்தை இணக்கம் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | இந்த வித்தியாசம் 1997 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து காணப்பட்டு வரும் வித்தியாசமாகும். போதியளவு ஏடுகள் பேணப்படாதுள்ளதுடன் தீர்த்து வைப்பதற்கு முடியாதுள்ளது. |
| (ii) | ஆயுர்வேத மருந்து இருப்பு | 218,580 | வித்தியாசயத்தை இணக்கம் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | வித்தியாசம் 2012 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்பிலிருந்து காணப்பட்டு வருவதாகும் தீர்த்து வைப்பதற்கு போதியளவு ஆவணங்கள் காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | மக்கள் வங்கியின் காசுக் கணக்கு 196100170010082 196100260010082 | 18,016,006 | வித்தியாசயத்தை இணக்கம் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | இப் பெறுமதி 2011 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்பிலிருந்து காணப்பட்டு வரும் வித்தியாசமாகும். இது தொடர்பாக உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த அறிக்கை எங்களுக்கு கிடைத்தன் பின்னர் அதற்கிணங்க சரி செய்வதற்கு எதிர்பார்க்கிறேன். |

**(ஈ) கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் இல்லாமை**

**தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 69,729,443 பெறுமதியான 07 கணக்கு விடயங்கள் தொடர்பாக முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது அவற்றை திருப்பதிகரமாகச் சான்றுறுதி செய்ய / மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்து வதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கபடுதல் வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 1.4 இணக்கமின்மை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 254 (அ) (2) ஆம் பிரிவு | சபையினால் அறவிட வேண்டியுள்ள அனைத்து பணத்தையும் அறவிட்டு சபையின் நிதியத்திற்கு செலவு வைப்பதற்குத் தேவையான அனைத்து | கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | (i) | வீதவரி – ரூபா 46,913,825 வீதவரியினை அறவீடு செய்வதற்கு விசேட வேலைத்திட்டம் |

நடவடிக்கைகளையும் எடுத்தல் மாநகர ஆணையாளரின் கடமையாக இருக்க வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 இல் அறவிட வேண்டிய 6 வருமான விடயங்களின் ரூபா 61,430,162 தொகையான நிலுவைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(ii) கைத்தொழில் வரி - ரூபா 57,103 பத்தரமுல்லை மாவட்ட அலுவலகத்தில் மாத்திரம் இந்த நிலுவை ஏற்பட்டுள்ளது. தேடிப்பார்த்து எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

(iii) வீட்டு வாடகை ரூபா 117,546 பத்தரமுல்லை ரீ.சீ.வீட்டு வாடகைப் பணமாகும்.

(iv) சந்தை வாடகை ரூபா 368,123. இந்த நிலுவைப் பணம் 2012 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டதுடன் கணக்குகள் குழுவின் பணிப்புரையின் அடிப்படையில் உள்ளூராட்சி திணைக்களத்தினால் இது சம்பந்தமாக விசாரணைகள் நடாத்தப்படுகின்றது.

(v) வர்த்தக கடைத்தொகுதி வாடகை ரூபா 2,263,526. இப் பணத்தை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | (vi) பொழுது போக்கு வரி ரூபா 11,710,039. இப் பணத்தை அறவீடு செய்வதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது நிலுவையில் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| | (i) | நி.பி 371(5) | தொடர்ச்சியாகக் காணப்பட்டுவரும் ரூபா 193,544 தொகையான தீர்த்து வைக்கப்படாத முற்பண மீதி | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | ரூபா 193,544 பணத்தை இதுவரை இனங்காண முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் இணங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| | (ii) | நி.பி 571 | 03 ஆண்டுகளை மிகைத்த ரூபா 171,272 பெறுமதியான வைப்புக்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | எதிர்காலத்தில் அத்தவறை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| | (iii) | நி.பி 1642 | 2018 ஆம் ஆண்டின் போது இடம்பெற்றுள்ள 05 வாகன விபத்துக்கள் சம்பந்தமாக பொலிஸிற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | உள்ளக விசாரணைகளுக்கு பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக சாரதி தெரிவித்துள்ளார். |

(இ) **சுற்றறிக்கை கடிதம்**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | ரூபா 100,000 உச்ச எல்வையை மிகைத்து முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கணக்காய்வு ஐயவினா கிடைத்தன் பின்னர் ரூபா 100,000 முற்பணத்தை மாத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அப்பணத்தில் தற்பொழுது தொலைபேசி படிகள் செலுத்துதல் இடம் பெறுவதாக தெரிவிக்கிறேன். |
| (ii) | 2013 யூன் 18 ஆந் திகதி WP/LGD/01/2013 ஆம் இலக்க மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | திட்டமிடல் குழுவிற்கு பங்குபற்றுவதற்காக நான்கு உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கைக்கு முரணாக மீளாய்வாண்டின் போது ரூபா 315,000 செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | உள்ளக சுற்றறிக்கை வழங்கியதன் ஊடாக முன்னாள் ஆணையாளரால் கட்டளைகள் வழங்கி சட்ட உத்தியோகத்தர் திட்டமிடல் குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டிருந்ததுடன் முன்னாள் நகராதிபதி பீ.எச்.புத்தாச அவர்களால் வேலை அதிகாரி அவர்களும் திட்டமிடல் குழு அங்கத்தவராக செயற்படுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) | 1985 மார்ச் 20 ஆந் திகதிய திசெ/1 ஆம் இலக்க நகரக அபிவிருத்தி சுற்றறிக்கை | அதிகாரமற்ற நிர்மாணங்களுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களில் 25 சதவீதம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்பி வைக்கப்படாது அப்பணம் வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | அதிகாரமற்ற நிர்மாணங்களுக்காக பெற்றுக்கொள்ளப்படுகின்ற பணத்தில் 25 சதவீதம் அளவானவை நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் பேணப்பட்டு வருகின்ற கணக்கில் வைப்புச் செய்யப்படுகின்றது. |
| (iv) | 1993 நவம்பர் 18 ஆந் திகதி 15 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார | உள்ளூராட்சி நிறுவனத்தின் மூலம் அறவிடப்பட்ட ரூபா 2,236,935 சேவைக் கட்டணம் நகர அபிவிருத்திக்கான வங்கி | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | இப்பணத்தை ஈடுபடுத்தி பதுவத்த சுய தொழில் நிலையத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் தபோவனய கெலவர வீதியை அபிவிருத்தி |

| | | | |
|---|---|---|---|
| சபையின் சுற்றறிக்கை | கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு இனங்காணப்பட்ட செயற்திட்டங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | செய்தல் என்பனவற்றிற்கான மதிப்பீடு மற்றும் சாத்திய வள ஆய்வு அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிவிளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 948,904,276 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 799,722,412 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மக்கள் வங்கியின் 196-1-001-6-3869561 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கு நீண்ட காலமாக செயற்படும் நிலையில் இல்லாதிருந்ததுடன் 2008 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்ட தேறப்படாத பெறுவனவுகள் ரூபா 528,488 மற்றும் இனங்காணப்படாத கொடுப்பனவுகள் ரூபா 295,596 என்பவற்றை தீர்த்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதியை சரிசெய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | பொதுக் கணக்குகள் குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரையின் பிரகாம் எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுப்பேன். |

### 2.3 வருமான நிர்வாகம்

**மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன.**

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 பட்டியலிடப் பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 பட்டியலிடப் பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 146,788,000 | 155,465,905 | 146,201,350 | 58,680,968 | 140,753,000 | 147,813,564 | 137,989,729 | 60.432,578 |
| (ii) | வாடகை | 21,980,505 | 19,511,569 | 17,753,272 | 2,749,197 | 20,337,325 | 19,323,989 | 16,970,407 | 2,808,403 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 15,720,000 | 16,891,953 | 16,841,953 | - | 15,300,000 | 13,749,903 | 14,049,515 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 705,689,700 | 1,066,603,602 | 464,861,872 | - | 602,263,436 | 602,263,436 | 263,809,151 | 338,454,285 |
| | மொத்தம் | 890,178,205 | 1,258,473,029 | 645,658,447 | 61,430,165 | 778,653,761 | 783,150,892 | 432.818,802 | 401,695,266 |

### 2.3.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான வீதவரி மற்றும் வரி தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவீடு செய்யும் நடவடிக்கையை நிறைவேற்று வதற்கு நடவடிக்கை எடுப்பேன் அறவீடு செய்வதற்கு சிக்கலான நபர்களின் ஆதனத்தை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| அலுவலகம் | 10 ஆண்டுக ளுக்கு மேல் | 5-10 ஆண்டு களுக் கிடையில் | 3-5 ஆண்டு களுக் கிடையில் | 1-3 ஆண்டு களுக் கிடையில் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கடவெல மாவட்ட அலவலகம் | 3,527,084 | 5,551,596 | 1,987,524 | 4,822,738 | 15,888,942 |
| பத்தரமுல்ல அலுவலகம் | 1,193,436 | 1,316,087 | 1,180,631 | 5,602,163 | 9,292,317 |
| அத்துருகிரிய அலுவலகம் | - | 4,786,845 | 2,126,687 | 9,147,691 | 16,061,223 |
| மொத்தம் | 4,720,520 | 11,654,528 | 5,294,842 | 19,572,592 | 41,242,482 |

### 2.3.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 மாதங்களை மிகைத்த நிலுவை ரூபா 142,281 தொகைக்குரிய 14 | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவீடு | அத்துருகிரிய மாவட்ட அலுவலகத்தை எதிர்காலத்தில் இந்த |

| | | | |
|---|---|---|---|
| | கடைகள் சீல் செய்யப்பட்டுள்ள போதிலும் இக் கடைகளை மீண்டும் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முதலாம் மாடிக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | நிலுவையான கடை வாடகை ரூபா 33,362 தொகைக்கான பத்தரமுல்லை 20 ஆம் இலக்க கடை சீல் வைக்கப்பட்டு 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | புதிய மதிப்பீட்டினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் கடுவெல மற்றும் பத்தரமுல்லை மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக்கொண்ட உடன் கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தயவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். |
| (இ) | கடுவெல பொதுச் சந்தைக் கடைகளின் வாடகை 2001 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டின் பிரகாரம் நடைமுறை ஆண்டும் அறவீடு செய்யப்பட்டது. 1984 ஆம் ஆண்டின் பின்னர் இதுவரை புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில் லை. 2018 ஒக்தோபர் 04 ஆந் திகதி சபையின் சம்மதத்துடன் இக் கடைகள் பேணப்படாலாம் எனவும் புனரமைப்பு நடவடிக்கைகள் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தும் இது வரை அது நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிதிக் குழுவில் திருத்திய மதிப்பீட்டினை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததன் பின்னர் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**2.3.4 ஏனைய வருமானம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **பொழுது போக்கு வரி** | | |
| | 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 8,665,254 தொகையான நிலுவைப் பொழுது போக்கு வரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காணப்படுகின்ற நிலுவைக்கு இணங்க அறவீடு செய்வதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளன. |
| (ஆ) | **வாராந்த சந்தை குத்தகை** | | |
| | 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடுவெல வாராந்த சந்தையிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 368,126 அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உள்ளூராட்சி திணைக்களத்தினால் இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| (இ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சபைக்கு கிடைக்க வேண்டிய வார்ணாமக் கட்டணம் மற்றும் தண்டப் பெறுமதி ரூபா 23,825,852 ஆக இருந்ததடன் அவற்றில் ரூபா 12,993,592 ஆனது 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டவையாகும். | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வீதவரிகள் நிலுவைகளை அறவீடு செய்யும் போது இம் மீதியினைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2.3.5 நீதிமன்ற தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையிடமிருந்து 2018 திசெம்பர் 31 வரை பெறவேண்டியிருந்த நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 12,993,750 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,192,891,690 ஆகும். | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தெல்கந்த காணிப்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 2017 ஆம் ஆண்டிற்கான முத்திரைக் கட்டண பட்டோலை மாகாண வருமானத் திணைக்களதிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் கொழும்பு மற்றும் ஹோமாகம காணிப் |

| | | |
|---|---|---|
| | | பதிவாளர் அலவலகங்களிலிருந்து முத்திரைக் கட்டணப் பட்டோலை தயாரிக்கப்பட்டு வருமான திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |

**2.3.6 அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீதான குத்தகை**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்காக அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீது குத்தகை அறவீடு செய்வதற்கு 2017 திசெம்பர் 22 ஆந் தகிதிய 2051 ஆம் இலக்க வர்த்த மானியின் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தம் கடுவெல மாவட்ட அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் அக் குத்தகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வெளிக்கள கடமைகளில் ஈடுபட்டு அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் தொடர்பாகப் பரீட்சித்து அவற்றை இனங்கண்டு அறிக்கையிடுமாறு வருமான பரிசோதனை உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டின் போது அப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள், பொது வீதிகள் என்பன தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல், நிருவகித்தல், பொது மக்களின் நல்வாழ்க்கைகள், நலன்புரிகள் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் பிரகாரம் மேலதிக வருமானங்களை உழைப்பதற்கு உப விதிகளைத் தயாரிக்காது 05 வருமான வழிகள் சம்பந்தமாக ரூபா 13,187,842 வருமானம் மீளாய்வாண்டின் போது உழைக்கப்பட்டிருந்தது. | உப விதிகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். | சவக்காலை / தகன நிலையம் ஒதுக்கீடு செய்யும் கட்டணத்திற்காக உப விதிகளைத் தயாரித்து அங்கீகாரத்திற்காக உள்ளுராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | | மிகுதியான 04 வருமான வழிகளுக்காகவும் தற்பொழுது உப விதிகளின் வரைபு தயாரிக்கப்பட்டு வருகின்றது. |

**(ஆ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கடுவெல பத்தரமுல்லை அதுருகிரிய ஆகிய உப அலுவலகங்களின் திட்டமிடப்பட்ட 518 வேலைகளில் 20 வேலைகள் கைவிடப்பட்டிருந்ததுடன் அதற்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | திட்டமிட்ட செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உடன்படிக்கை செய்யப்பட்ட காலம் மிகைத்துள்ள போதிலும் வேலைகள் ஆரமபிக்கப்படாத கடுவெல பத்தரமுல்லை அத்துருகிரிய ஆகிய உப அலுவலகங்களின் 31 வேலைகள் இரத்துச் செய்யப்பட்டு மீதிகளைப் பதிவழிப்பதற்காக 2019-06-04 ஆந் திகதி நடைபெற்ற மகா சபைத் தீர்மானம் இலக்கம் 02/மூ/1054 இன் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

**(இ) செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஆரம்பிக்க வேண்டியிருந்த ரூபா 24,111,931 மதிப்பீட்டுக் கிரயமான 30 வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிர்மாண வேலைகள் திட்டமிட்டவாறு தாமதமின்றி பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். | உடன்படிக்கைக் காலம் மிகைத்திருந்த போதிலும் வேலை ஆரம்பிக்கப்படாத கடுவெல, பத்தரமுல்ல மற்றும் அத்துருகிரிய உப அலுவலகங்களுக்குரிய 31 வேலைகள் இரத்துச் செய்யப்பட்டு மீதிகளைப் பதிவழிப்பதற்காக 2019-06-04 ஆந் திகதி நடைபெற்ற மகா சபையின் 02/மூ/1054 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. |

## (ஈ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

----------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் உருவாகின்ற குப்பைகளை சபையின் ஊழியர் மற்றும் வாகனங்களை ஈடுபடுத்தி சபையினால் சேகரிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 175,735,196 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அவ்வாறு சேகரிக்கப்படுகின்ற குப்பைகளை அப்புறப்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட 04 ஒப்பந்த நிறுவனங்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 40,686,139 செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 53,320,390 செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க குப்பைகளை அப்புறப்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது செலவு செய்யப்பட்ட மொத்த பணம் ரூபா 269,741,725 ஆகும். இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 130 ஆம் பிரிவின் பிரகாரம் சேகரிக்கப்படுகின்ற அனைத்து குப்பைகளும் சபையின் ஆதனமாக இருக்க வேண்டிய போதிலும், சபையின் வருமானத்தில் 6.3 சதவீதம் குப்பைகளை அப்புறப்படுத்துவதற்காக செலவு செய்யப்பட்டிருந்தது. | குப்பைகளிலிருந்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குப்பைகளை அப்புறப்படுத்தும் சேவைக்காக செவன்ஸ்டார் சுப்பர் சேவிஸ் நிறுவனத்தினால் 2018-07-04 ஆந் திகதியிலிருந்து டிப்பர் வாகனம் 01 லோட்டிற்கு ரூபா 18,000 தொகைக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு சேவைகள் வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 228 ஆம் பிரிவின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட | | 2018-09-18 ஆந் திகதி உடன்படிக்கை நிபந்தனைகளை |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்த நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | மீறியதன் காரணமாக செவன்ஸ்டார் சுப்பர் சேவிஸ் நிறுவனம் குப்பைகளை அகற்றும் சேவையிலிருந்து விலகியிருந்தது. இரண்டாவது விலைமனுவைச் சமர்ப்பித்த நிறுவனமாகிய CFC மெசினரி (தனி) கம்பனி மற்றும் அக்கறையுள்ள தரப்பினர்கள் விருப்பத்தை தெரிவித்திருந்தனர். அவர்களுடன் கைச்சாத்திடுவதற்குத் தயாரிக்கப்பட்ட உடன்படிக்கையும் மேலுள்ளவாறாகும். |
| (iii) | மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் 229(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தகாரர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய பிணை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | மகா சபைத் தீர்மானத்தில் பிரகாரம் மீண்டும் கேள்விகளைக் கோரும் வரை தெரிவு செய்யப்பட்ட நபர்களாக இருப்பதனால் இதுவரை பிணை வைப்புக்கள் பெற்றுக் கொள்ளுதல் இடம்பெற்றிருக்கவில்லை |
| (iv) | மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் 131 ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றாடலுக்கு, மக்களுக்கு மற்றும் காட்டு மிருகங்களுக்கு இன்னல்கள் அற்ற வகையில் குப்பைகளை வெளியேற்றுவதற்கு சபையினால் ஒழுங்கு விதிகள் தயாரிக்கப்பட வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தும் குப்பைகளை அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் களிடமிருந்து முறைப்படியாக குப்பைகள் அகற்றப்படுகின்றதா மற்றும் எப்பிரதேசத்தில் அகற்றப்படுகின்றது என்ற விடயங்கள் சபையினால் தேடிப்பார்க்கப்படவில்லை. | குப்பைகளை அகற்றுதலை முறைப்படியாக மேற்பார்வைக்கு உட்படுத்துதல் வேண்டும். | பதில்கள் வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (v) | சபை அதிகாரப்பிரதேசத்தில் குப்பை முகாமைத்துவத்திற்காக போதியளவு வாகனங்களும் ஊழியர் வளங்களும் சபையிடம் காணப்பட்டிருந்தும் இக்கடமைகளை சபைக்கு மிகவும் நலன்தரக்கூடிய வகையில் நிறைவேற்றுவதற்காக எதிர்காலத் திட்டங்கள் அல்லது ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் திண்மக்கழிவு முகாமைத்துவ அதிகாரசபையால் (மே.மா) சமர்ப்பிக்கப்பட்ட "சேதனப்பசளைத் தளத்தை புனரமைப்புச் செய்யும் திட்டம் - 2018" தற்பொழுது வரை அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை. | சேதப் பசளைத் திட்டத்தை புனரமைப்புச் செய்யும் திட்டம் அமுல்படுத்தப் படுதல் வேண்டும். | 2019 கடுவெல மாநகர சபையின் செயல் நடவடிக்கைத் திட்டத்தை ஐந்து ஆண்டு திட்டம் சமாந்தரமாகத் தயாரிக்கப்பட்டது. ஒரு நாளுக்கு உக்குகின்ற குப்பை 10 டொன்களை உள்ளடக்கும் வகையில் எரிவாயு செயற்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் வேலை முடிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>சேதனப் பசளைகளை கலக்குகின்ற இயந்திரம் அடிக்கடி செயற்படாமை, ஒரு தடவையில் உள்ளடக்க கூடிய பசளைகளின் அளவு மட்டுப்படுத்தப்படுவதின் காரணமாக இத்திட்டத்தை அமுல்படுத்துதல் தாமதமடைந்துள்ளது புதிய சேதனப் பசளைகளைக் கலக்கும் இயந்திரத்தை கொள்வனவு செய்ததன் பின்னர் 11 சேதனப் பசளை தளத்தை புனரமைப்புச் செய்யும் திட்டம் - 2018 அமுல்படுத்தக்கூடியதாக இருக்கும். |

**(உ) சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| களணி கங்கைக்கு அருகாமையிலுள்ள கால்வாய்களை மறித்து மணல் வடிகட்டி எடுக்கின்ற 09 இடங்களுக்காக ரூபா 5,000 வீதம் 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 45,000 பணம் கைத்தொழில் வரியாக சபையினால் அறவிடப்பட்டிருந்தும் அதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட சுரங்கங்கள் மற்றும் வெடிபொருட்கள் நிறுவனத்திடமிருந்து | சுற்றாடல் பிரச்சினை தொடர்பாக சபை கவனம் செலுத்துதல் வேண்டும். | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 274(இ)(i) ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

பெற்றுக் கொள்ளப்பட்ட உத்தரவுப்பத்திரம், மத்திய சுற்றாடல் அதிகாசபையிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட உத்தரவுப்பத்திரம், மற்றும் ஏனைய அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களினால் வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் மூலம் அருகாமையில் உள்ள பிரதேசங்களிலுள்ள காணிகளில் நீர் கீழ் இறங்கிச் செல்லும் பிரச்சினை உருவாகும் ஆபத்து தொடர்பாக சபையினால் கவனம் செலுத்தப்படவில்லை.

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் சம்பந்தமான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக தெளிவுபடுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப் படுதல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிலிருந்து 2030 ஆம் ஆண்டு வரை நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட அறிக்கை தற்பொழுது தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருமானம் குறைந்த குடும்பங்களிலுள்ள பிள்ளைகளுக்கு சப்பாத்துக்களை கொள்வனவு செய்வதற்காக வவுச்சர்களை வழங்குதல் | | |
| வருமானம் குறைந்த குடும்பங்களிலுள்ள பிள்ளைகளுக்கு சப்பாத்துக்கள் வழங்குவதற்காக பிள்ளைகளைத் தெரிவு செய்வதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட விடயங்களும் வரையறைகளும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,380,000 அளவான செலவுகள் மேற்கொள்ளப்பட்டு பாடசாலைப் பிள்ளைகளுக்கு சப்பாத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கான வவுச்சர்களை பகிர்ந்தளிப்பது சம்பந்தமாகவும் அப்பணத்தை பயன்படுத்திய முறைமைகள் | குறைந்த வருமானம் பெறுபவர்களை தெரிவு செய்வதற்கான வரையறைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் இது சம்பந்தமாக வெளிப்படைத் தன்மையுடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குறைந்த வருமானம் பெறுபவர்களின் பிள்ளைகளுக்காக இந்த வவுச்சர்கள் வழங்குமாறு உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தப் பட்டுள்ளது. |

தொடர்பான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும் | | |
| 2018 திசெம்பர் 31 இல் காணப்பட்ட 42 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். | ஆரம்ப பதவியணியிலுள்ள 17 வெற்றிடங்களுக்கு ஆம்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளன. 09 பதவிநிலைத் தர உத்தியோகத்தர்களில் 02 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. ஏனைய பதவிநிலைப் பதவி வெற்றிடங்களை நிரப்பித்தருமாறு கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 06 இரண்டாந்தர பதவி வெற்றிடங்களும் வருமான பரிசோதகர் பதவிகளாக உள்ளதுடன் நீதிமன்ற நடைமுறை காணப்படுவதனால் அச்சேவையில் ஆட்சேர்த்தல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.<br>தொழில்நுட்ப உத்தியோகத்தர் (இயந்திரம்) வெற்றிடம் 2019-01-24 ஆந் திகதி நிரப்பப்பட்டுள்ளது.<br>மொழிப்பெயர்ப்பு பதவி வெற்றிடத்தை நிரப்பித்தருமாறு வேண்டுதல் விடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) ஊழியர் கடன் | | |
| சபையிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற 33 உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 1,713,705 தொகையும், ஓய்வுபெற்ற 46 உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 377,959 தொகையும், சேவையிலிருந்து | காலங்கடந்த நிலுவையான ஊழியர் கடன் மீதிகளை தாமதமின்றி அறவீடு செய்தல் வேண்டும். | 10 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதியின் போது ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிக் காணப்பட்ட கடன் மீதிகள் ரூபா 364,191 ஆகும். சேவையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட 08 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 125,848 பணம் அறவிட வேண்டியுள்ளது. சேவையை |

| | | |
|---|---|---|
| இடைநிறுத்தப்பட்ட 08 உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 125,848 தொகையும் சேவையை விட்டுச் சென்ற 37 உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 410,060 கடன் மீதியும் அறவிட வேண்டியிருந்தது. அந்நிலுவைக்கடன் மீதியை அறவீடு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து சேவையை கைவிட்டுச் சென்ற திகதியில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாக இருந்ததனால் அத்தரப்பினர்களிடமிருந்தும் நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்தல் சிக்கலானதாக இருக்கும். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) **பத்தரமுல்லை ரீசீ.தோட்டத்தை அத்துமீறிக் குடியிருந்தவர்களுக்கு காணித் துண்டுகளை வழங்குதல்** | | |
| அரசாங்கத்திற்குச் சொந்தமான இக்காணியில் அத்துமீறிக் குடியிருந்த 13 குடியிருப்பாளர்கள் அக்காணிகளிலிருந்து வெளியேறுவதற்கான கட்டளை 1997 பெப்ரவரி 24 ஆந் திகதி கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க செயற்பட்டு 1997 யூலை 11 ஆந் திகதி பிஸ்கால் உத்தியோகத்தர்களால் உரிய காணித் துண்டுகளின் வெறுமைப்படுத்திய தெளிவான உரிய அப்போதைய கடுவில பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் 2005 மே 28 ஆந் திகதி ஏற்படுத்தப்பட்ட 13 குத்தகை உறுதிகளின் மூலம் மேற்கூறிய 13 அத்துமீறிய குடியிருப்பாளர்களுக்கு 04 பேர்ச்ர்ஸ் வீதம் 13 காணித்துண்டுகள் 33 ஆண்டுகள் காலத்திற்காக ஒரு மாதத்திற்கு ரூபா 500 குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. தற்பொழுது இக்காணிகளில் அவர்கள் வீடுகள் | நீதிமன்ற கட்டளைக்கு இணங்க சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கோவைகளிலுள்ள விடயங்களைப் பரீட்சித்துப் பின்னர் பதில் சமர்ப்பிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணித்து வசித்து வருகின்றனர். 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையான மாதாந்த குத்தகை ரூபா 101,393 ஆகும். | | |
| (ஆ) | 2016 யூலை 11 ஆந் திகதிய LGD/08/2016 ஆம் இலக்க மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான பொது ஆதனங்களை சரியாக அளவீடு செய்து எல்லைகளைத் தயார்ப்படுத்தி எல்லைகளைத் தோற்றுவிக்கும் நடவடிக்கைகளுக்காக 02 நில அளவையாளர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தும் இதுவரை அச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மீண்டும் விலைமனுக்களை கோரி நில நில அளவையார்களின் சேவையைப் பெற்றுக் கொண்டு இச்செயற்பாட்டை விரைவாகப் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. |

### 3.5 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **ஜயவடனகம சமூக அண்டபத்தை விழா மண்டபமாக மாற்றல்** | | |
| ஜயவடனகம வீடமைப்புத் தொகுதியில் சமூக மண்டபம் 2018 நவம்பர் மாதம் 07 ஆந் திகதி மாதத்திற்கு ரூபா 70,000 வீதம் 05 ஆண்டுகளுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகை உடன்படிக்கையின் 13 ஆவது பிரிவிற்கு முரணாகவும் சபையின் இணக்கப்பாடும் இன்றி கட்டிடத்தின் தன்மை மற்றும் படிவத்தை மாற்றம் செய்து விழா மண்டபமாக மாற்றப்பட்டிருந்தது. | வீடமைப்புத் தொகுதியிலுள்ள குடியிருப்பாளர்களின் நலன்புரிக்கு முன்னுரிமை வழங்குதல் சபையின் பொறுப்பாகும். | ஜயவடனகம சமூக மண்டபத்தை மாற்றம் செய்து விழா மண்டபமாக மாற்றுதல் செய்து தொழில் முயற்சியைப் பேணுவதற்கு குத்தகைதாரரால் விடுக்கப்பட்ட வேண்டுதலும் அதற்கிணங்க வழங்கப்பட்ட அனுமதியும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. |
| சமூக மண்டபத்தை வர்த்தக நடவடிக்கைகளுக்காக வழங்குதல் மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளுக்கு இணக்கமற்றதுடன் இதன் காரணமாக வீடமைப்புத் தொகுதியில் | | ஜயவடனகம சமூக மண்டபத்தை குத்தகைக்கு வழங்குதல் சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் வீடமைப்புத் தொகுதியில் |

| | | |
|---|---|---|
| வசிப்பவர்களுக்கு அவர்களின் பொதுத் தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்கு அந்த நிலையம் இல்லாமல் இருந்தது. | | குடியிருப்பவர்களுக்காக 10% கழிவுடன் சேவையை வழங்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.6.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1994 ஆம் ஆண்டின் போது மாலபே கஹன்தொட வீதியில் 130/13 ஆம் இலக்க ஹொரகஹவத்த (பென்டசி லேன்ட்) பூங்காவில் பராமரிக்கப்பட்டு வந்த காணிகளை ஏலத்தில் விற்பனை செய்யும் போது பொது வசதிகளுக்காக சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த 45.47 பேச்சஸ் காணித் துண்டின் எல்லைகள் குறிப்பிடப்பட்டிருக்காததுடன் உறுதி காணாமல் போயிருந்தது. மேலும் அக்காணித் துண்டில் அதிகாரமற்ற ஒரு நபர் கைப்பற்றி ஒரு வீட்டினை அமைத்து வசித்து வந்தார். | சபைக்குச் சொந்தமான காணிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அதிகாரமின்றி குடியிருந்த நபருக்கு 14 நாட்களுக்கு வெளியேறுமாறு 2019.04.04 ஆந் திகதி ஒரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. எனினும், இக்குடியிருப்பாளர் வெளியேறியிருக் காததனால் அக்குடியிருப்பாளர்களை காப்பாற்றுவதற்கான சட்ட ஆலோசனை களுக்காக 2019.05.28 ஆந் திகதி உரிய கோவை சட்டப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | அதுருகிரிய திட்டத்தில் 92/82 ஆம் இலக்க “STM” ஸ்ரெல்மேஜ் வீடமைப்பு” பொது வசதிகளுக்கான 03 காணித் துண்டுகளின் இரண்டு காணித்துண்டுகளில் அதிகாரமற்ற குடியிருப்பாளர்கள் 11 வீடுகளை நிர்மாணித்து வசித்து வந்திருந்ததுடன் மிகுதி காணித்துண்டுகளைச் சுற்றி மதில்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. | சபைக்குச் சொந்தமான காணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பரீட்சித்து பின்னர் பதில்களைச் சமர்ப்பிப்பேன். |
| (இ) | தெடிகமுவ பதுவத்தை ஏலவிற்பனைக் காணியின் பொதுவசதிக் காணியை அதிகாரமின்றி கைப்பற்றப்பட்ட 15 | சபைக்குச் சொந்தமான காணிகளின் பாதுகாப்பை | பரீட்சித்து பின்னர் பதிலைச் சமர்ப்பிப்பேன். |

| | | |
|---|---|---|
| மேற்பட்ட அளவான நிர்மாணிக்கப்பட்டு குடியிருந்து வந்திருந்தார்கள். | உறுதிப் படுத்துதல் வேண்டும். | |
| மாலபே, பிட்டுகல கஹன்தொட ஜயந்தி மாவத்தையிலுள்ள டுவின்டெரஸ்'' வீடமைப்புத் திட்டத்தின் பொது வசதிக் காணி அதிகாரமற்ற குடியிருப்பாளர்களால் கைப்பற்றப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான காணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இக்காணிகளின் திட்டவரைபடம் கிடைத்ததன் பின்னர் பொது வசதிக் காணியைச் சுற்றி வேலி அமைக்கப்பட்டுள்ளது. |

### 3.6.2 பொறுப்பேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடுவெல வாராந்தச் சந்தை அமைந்துள்ள காணியை சபைக்கு பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2017 செப்தெம்பர் 09 ஆந் திகதி இந்த வாராந்த சந்தையை மக்களின் உரிமைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் 2019 மே 24 ஆந் திகதி வரை அதற்காக நிரந்தர மின்சார இணைப்புக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காததுடன் 20 கடைகள் வியாபாரம் செய்வதற்காக ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | வாராந்த சந்தையை பொறுப்பேற்கும் நடவடிக்கையை விரைவாகச் செய்தல் வேண்டும். அனைத்து கடைகளையும் வியாபாரம் செய்வதற்காக ஒப்படைத்தல் வேண்டும். | அது தொடர்பான நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்தது. 20 வர்த்தக நிலையங்களில் 14 நிலையங்களுக்காக தற்போழுது வேண்டுதல்கள் கிடைத்துள்ளதுடன் மூன்றாம் கட்டத்தின் கீழ் அதற்காக உடன்படிக்கை செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மிகுதியான 06 வர்த்தக நிலையங்களை பிரதேசத்தில் வசிக்கும் வர்த்தக சமூகத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

### 3.6.3 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 ஆம் ஆண்டில் கடுவெல பஸ் தரிப்பிடத்தில் பொருத்தப்பட்ட ரூபா 3,900,000 பெறுமதியான மின்சார படிக்கட்டுக்கள் பல ஆண்டுகளாக செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் அதனை பழுதுபார்த்து | வளங்களிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். | ஏனைய முகவர் நிறுவனத்தினால் அல்லது சில நிறுவனங்களினால் பரீட்சிக்குமாறு வேண்டுதல் விடுத்து மீண்டும் மீண்டும் செயற்படக்கூடிய நிலைக்கு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | சபை அதிகாரப் பிரசேத்திலுள்ள வீதிகளுக்கு காபட் இடுவதற்காக 2017 ஒக்தோபர் 20 ஆந் திகதி ரூபா 66,612,046 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட 06 இயந்திரங்கள் எதுவித பயன்பாட்டிற்கும் எடுத்துக் கொள்ளப்படாது அத்துருகிரிய பயன்பாட்டிற்குக் எடுத்துக் கொள்ளப்படாது அத்துருகிரிய உப அலுவலக வளவில் வைக்கப்பட்டிருந்தன. | வளங்களிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். | கொள்வனவு செய்யப்பட்ட 06 கலவை மற்றும் தெளித்தல் இயந்திரங்களில் 02 இயந்திரங்கள் சபையின் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் மிகுதியான 04 இயந்திரங்களை விற்பனை செய்வதற்காக விலை மனுக்கள் கோரப்பட்டிருந்தும் கிடைத்த கூடுதல் விலை மனுப் பெறுமதியானது இந்த இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு செலவாகிய பணத்தை விட குறைந்த பெறுமதியாகிய இருந்ததனால் அந்த விலைகள் நிராகரிக்கப்பட்டன. மீண்டும் விலைகளைக் கோருவதன் அடிப்படையில் விற்பனை செய்தல் அல்லது பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்காக கொழும்பு மாநகர சபையின் இயந்திர பொறியியல் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (இ) | சபை அதிகாரப் பிரதேசத்திலுள்ள வீதிகளில் நிறுவுவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 588,050 பெறுமதியான 189 பெயர்ப் பலகைகள் சபை வளவில் பாதுகாப்பின்றி குவித்து வைக்கப்பட்டிருந்தது. | பெயர்ப் பலகைகளை நிறுவுதல் வேண்டும். | இப் பெயர்ப்பலகைகளை பின்னர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | கல்தியாவல இளைஞர் நிலையத்தால் பேணப்பட்டு வருகின்ற உடல் மேம்பாட்டு நிலையத்தில் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி கண்டுபிடிக்க | உடல் மேம்பாட்டு நிலையத்தை மீண்டும் செயற்படுத்து வதற்கு | உடல் மேம்பாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தும் சில உபகரணங்களுக்காக நில உதிரிப்பாகங்கள் குறைத்து வழங்கப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| முடியாத உடல் மேம்பாட்டு உபகரணங்கள் பராமரிக்கப்படாது அல்லது பயன்படுத்தப்படாது வைக்கப்பட்டிருந்தன. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மீண்டும் இந்த உடல் மேம்பாட்டு நிலையத்தை செயற்படுத்துவதற்காக தேவைக்கேற்ப நடவடிக்கை எடுப்பேன். |

## 3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடுவெல உப அலுவலகத்தின் களஞ்சிய பிரிவில் இருந்த ரூபா 343,016 பெறுமதியான 347 கொடிக் கம்பங்கள் காணாமல் போயிருந்தன. | விசாரணைகளை நடாத்தி பொறுப்பான நபர்களிடமிருந்து நட்டத்தை அறவீடு செய்தல் வேண்டும். | 2016 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்ட கொடிக்கம்பங்களில் 141 பற்றாக்குறைகள் காணப்பட்டதுடன் அது தொடர்பாக விசாரணைகளை நடாத்துமாறு அச்சேவையாளருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்காக போதியளவு உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஊ) ஆம் பிரிவின் பிரகாரம் செயற்திறனான உள்ளகக் கணக்காய்வு அமுல்படுத்தப் படுதல் வேண்டும். | கணக்குகள் குழுவின் முன்னிலையில் விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்காக கோருவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரியப்படுத்தப்பட்டுள்ளதனால் அதற்காக பதில் தயாரிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுதல் வேண்டும்.<br><br>உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் சேவையாற்றிய இரண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் ஒரு உத்தியோகத்தர் குழந்ததை பெற்றிதன் பின்னர் சேவையிலிரந்து விலகிச் சென்றுள்ளதுடன் ஒரு உத்தியோகத்தர் ஆசிரியர் நியமனம் கிடைத்ததன் காரணமாக சேவையிலிருந்து விலகியிருந்தார். |